10.10.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.136/2024</u>

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. விவேகானந்தன் | | |
| த/பெ | ஆர்.பழனி | | |
| கிராமம் | வல்லம் | தொழில் | உதவி ஆய்வாளர், |
| தாலுக்கா | பண்ருட்டி | வயது | 37 /2025 |
| மாவட்டம் | கடலூர் | தேதி | 10.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம், பெரிய தச்சூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 02/10/2023ம் தேதி கெடார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, எனக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ரமேஷ் த/பெ.கிருஷ்ணன் தும்பூர் தாங்கல் கிராமம் என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் தனக்கும், செல்வகுமார், ஜெயக்குமார் ஆகியோர்களுக்கும் இடையே இருந்த முன்விரோதம் குறித்தும், சம்பவம் குறித்தும், அதில் சொல்லியிருந்தார். பின்பு அந்த புகார் வாக்குமூலத்தில்

அதிகாலை 3.00 மணிக்கு ரமேஷிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு நிலையம் வந்து அன்று காலை 9:30 மணியளவில் நிலைய குற்ற எண் 215/2023 இ.த.ச.பிரிவுகள் 294 (b), 323, 324, மற்றும் 307 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆகும். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். பின்பு புகார் வாக்குமூலம், அச்சு முதல் தகவல் அறிக்கை இரண்டையும் சேர்த்து முறையாக விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் - 2 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பிரதிகளை உயர் அதிகாரிகளுக்கும், ஒரு பிரதியை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்கள். மேலும் இந்த வழக்கின் விசாரணைக்கு நான் ஆய்வாளருக்கு உறுதுணையாக இருந்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

புகார் வாக்குமூலம் எங்கு வைத்து, எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்பது குறித்து எந்தவிதமான குறிப்பும் இல்லை. புகார் வாக்குமூலத்தை நான் பெற்றதற்கான குறிப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். குற்ற நிகழ்வு நடந்ததாக சொல்லப்படும் சமயம் 1/10/2023 அன்று நள்ளிரவு எந்தவிதமான புகார் எங்கள் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் 1/10/2023 அதிகாலை 3 மணி என்றால் சரியல்ல. 1/10/2023 மாலை 4 மணியளவில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் சுரேஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரம் மறுநாள் காலை 7:00 மணி என்றால் சரிதான். மருத்துவமனையில் சுரேஷ் என்பவரை பார்த்து நான் எந்தவிதமான வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் ரமேஷ் என்பவர் உள்நோயாளி கிடையாது என்று சொன்னால், சரியல்ல. உள்நோயாளிதான். அதுகுறித்து எந்தவிதமான மருத்துவ ஆவணங்களையும் நான் வாங்கிப் பார்க்கவில்லை. புகார் வாக்குமூலம் பெறுவதற்கு முன்பு நான் எந்த விதமான விபத்து பதிவேட்டையும் வாங்கி பார்க்கவில்லை என்று சொன்னால், விபத்து பதிவேட்டை வாங்கி பார்த்தேன். இறந்ததாக சொல்லப்படும் சுரேஷ் என்பவரது விபத்து பதிவேட்டை மட்டும் வாங்கிப்

பார்த்தேன். அ.சா. 1 ரமேஷ் என்னிடம் எந்தவிதமான புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அவரிடம் வெற்றுத் தாள்களில் கையொப்பம் வாங்கிவிட்டு பின்னிட்டு அதை நிரப்பிக் கொண்டோம் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு எதிரி கைது செய்யப்பட்டபோதுதான் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>